DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.19/2025**

**2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | தனியார் வேலை |
| பெயர் | - | முனியாண்டி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | செல்வராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | நல்லமுடி எஸ்டேட் | வயது | - | 32/2026 |
| சாதி | - | | | | |

**11-02-2026**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து நகைக்கடையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முருகம்மாள் என்பவரை தெரியும். என்னிடம்காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரித்தார்கள்.
**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

1. கடந்த 19.11.2024-ம் தேதி 21.00 மணிக்கு வால்பாறை காவல் நிலைய குற்ற எண்.136/2024 வழக்கு சம்பந்தமாக போலீசார் சம்பவயிடமான வால்பாறை SBI ATM சென்டர் அருகில் விசாரணை செய்து கொண்டிருந்தபோது, நானும், ராஜேஷ்குமார் என்பவரும் நின்று கொண்டிருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் எங்கள் முன்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், ராஜேஷ்குமார் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரிலிருந்து குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.19/2025**
**2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.5 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | தனியார் வேலை |
| பெயர் | - | ரவிக்குமார் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | பவுன்ராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | பள்ளிவாசல் வீதி | வயது | - | 38/2026 |
| சாதி | - | | | | |

**<u>11-02-2026</u>**

**( எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**
நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து நகைக்கடையில் வேலை செ ய்து வருகிறேன். அ.சா.1 முருகம்மாள் என்பவரை தெரியும், என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 20-11-2024-ம் தேதி மாலை நேரத்தில் வால்பாறை காவல் நிலைய போலீசார் நான் வேலை செய்யும் நகைகடையில் விசாரித்து கொண்டிருந்தார்கள். அப்போது ATM கார்டு காணாமல் போய்விட்டதாகவும், அதனை அ.சா.1 க்கு ஒருவர் மாற்றி கொடுத்துவிட்டதாக போலீசார் சொன்னார்கள். என்முன்பாக போலீசார் யாரையும் விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படம் கைபபற்றுதல் மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(கைபபற்றுதல் மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் 43 ATM கார்டுகளும், தொப்பி, டேட்டா கேபிள் ஆகியவற்றை கைப்பற்றியதாக கூறினார்கள். மேற்படி பொருட்களை ஒரு நபரிடமிருந்து கைப்பற்றியதாக கூறினார்கள். அந்த நபர் ஆஜர் எதிரியாவார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>
நான் எதற்காக கையொப்பம் செய்தேன் என்றால் நான் கடையில் இருந்தபோது போலீசாரும் அ.சா.1 முருகம்மாளும், ATM கார்டை யாரோ மாற்றி கொடுத்துவிட்டார்கள் என்று அவரை தெரியுமா என்று என்னிடம் விசாரித்தார்கள். அதற்காக கையொப்பம் செய்யச் சொன்னார்கள் கையொப்பம் செய்தேன். நான் மேற்படி பொருட்களை கைப்பற்றியதை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.19/2025**
**2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 6-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | தனியார் வேலை |
| பெயர் | - | சதீஸ்குமார் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | சிவஞானம் | சமயம் | - | |
| கிராமம் | - | ராஜீவ் காந்தி நகர் | வயது | - | 29/2026 |
| சாதி | - | | | | |

**<u>11-02-2026</u>**

**( எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தனியார் நிதி நிறுவனத்தில் வேலை செய்து வருகீறேன். அ.சா.1 முருகம்மாள் என்பவரை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். (அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது) கடந்த 12-11-2024-ம் தேதி மாலை நேரத்தில் நான் வேலை செய்யும் கடை அருகே வைத்து காவல் ஆய்வாளர் கேட்டுக்கொணடதின் பேரில் கையொப்பம் செய்தேன். ATM யில் பணம் காணாமல் போனது சம்பந்தமாக ஆய்வாளர் விசாரித்துக்கொண்டு இருந்தார் போலீசார் என்முன்பாக யாரையும் விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். (கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகீறது) போலீசார் என் முன்பாக எந்த பொருளையும் கைப்பற்றவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

கடந்த 20-11-2024-ம் தேதி வால்பாறை காவல் நிலைய போலீசார் வால்பாறை டவுன், SBI

ATM அருகில் கண்காணித்தபோது ஆஜர் எதிரி முகமூடி அணிந்து அந்த வழியாக வந்தபோது போலீசாரை கண்டதும் ஓட முயற்சித்தவரை போலீஸ் பார்ட்டி என்முன்பாகவும் ரவிக்குமார் ஆகியோா முன்பாக எதிரியை காரணம கூறி காலை 11.30 மணிக்கு கைது செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அப்போது எதிரி தாமாக முன்வந்து ஒர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்று சொன்னால் சரியல்ல. அதன் அடிப்படையில் 12.45 மணிக்கு எதிரி எடுத்து ஆஜர் செய்த ATM கார்டுகளை மற்றும் பணம் ஆகியவற்றை எங்கள் முன்பாக மகஜரில் போலீசார் கைப்பற்றினர்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், ரவிக்குமார் என்பவரும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலும் சாட்சிகளாக கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து எதிரிக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை வழக்கறிஞர் ஆஜரிலிருந்து இல்லை என்றார்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.